Registered as a Newspaper

A/L 87
WEEKEND CLASSES
8-00 — 9-00 Botany
9-00 — 10-00 Zoology
10-00 — 11-00 Chemistry
11-00 — 12-00 Physics
1-30 — 3-30 Pure / Applied } Maths.
New Master
INSTITUTE
Navalar Road, Jaffna.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1-25

A/L 87
ZOOLOGY
Mr. Naganathan
WEEKEND CLASSES
Monday Friday
8-30 — 10-30
DAY CLASSES
Monday Friday
10-30 — 12-30
New Master
INSTITUTE
Navalar Road, Jaffna.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஢ு ஆனி மீ 12 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 28 (26 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 181

தெல்லிப்பளை முதல் யாழ் நகர் வரை

# இந்திய உயர் அதிகாரிகளுக்கு ஈழத்தமிழர் குதூகல வரவேற்பு

## பூரண கும்பங்கள் மலர்மாலைகள் சகிதம் வீதி எங்கும் நீக்கமற நின்ற மக்கள்

### போராட்டத்தை அங்கீகரிக்குமாறு கோஷம்; மகஜர்களை வாங்கிக் கவனமாக வைத்தனர்

— அலுவலகச் செய்தியாளர்: கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், ஜூன் 26

நிவாரணப் பொருள்களை ஏற்றிவந்த இந்தியக் கப்பல்களின் வருகையைத் தொடர்ந்து, இந்திய உயர் அதிகாரிகளுக்கும், செஞ்சிலுவை அதிகாரிகளுக்கும் நேற்று ஈழத் தமிழ் மக்கள் குதூகல வரவேற்பு அளித்தனர்.

தெல்லிப்பளை தொடக்கம் யாழ்ப்பாணம் வரையும், வீதி எங்கும், பூரண கும்பங்கள், மலர் மாலைகள் சகிதம் அணி அணியாக, நீக்கமற நின்ற மக்கள், இந்தியப் பிரதிநிதிகளை மனமுவந்து வரவேற்றனர்.

இந்திய அதிகாரிகள் வந்த வீதி எங்கும் வெயிலையும் பாராது காத்திருந்த மக்கள் மாலையில் அவர்கள் வந்தபோது நிவாரணப் பொருள் வழங்கியதற்கு இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்தும், ஈழப் போராட்டத்தை அங்கீகரிக்குமாறு கோரியும் முழக்கமிட்டனர்.

இந்திய அதிகாரிகளிடம் பல இடங்களிலும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன. இந்திய அதிகாரிகள் அவற்றைப் படிப்பதற்காக கவனமாக வாங்கி வைத்தனர்.

ஈழத் தமிழர்—இந்திய மக்கள் உறவில் பெரும் ஆக்கபூர்வமான மாற்றங்கள் வரும் என்பதற்கு மக்கள் அளித்த வரவேற்பு கட்டியங் கூறுவதாக இருந்தது.

நேற்று மாலை 5-15 மணியளவில் கொழும்பு இந்தியத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் திரு. எச். எஸ். பூரி, பாதுகாப்பு அதிகாரி கப்டன் குப்தா ஆகியோரும், இந்திய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் காங்கேசன் துறை முகத்திலிருந்து வெளியே வந்தனர்.

அவர்களுடன் யாழ். செஞ்சிலுவை அதிகாரிகளும், உள்ளூர் பத்திரிகையாளர்களும், சென் ஜோன் அம்புலன்ஸ் பிரதிநிதிகளும் வெளியே வந்தனர்.

அனைவரும் இ.போ.ச. பஸ்ஸில் காங்கேசனில் இருந்துபுறப்பட்டபோது மாவிட்டபுரம்சந்திவரை இராணுவப் படையினர் பாதுகாப்பு வழங்கினர்.

அதன் பின்னர் தெல்லிப்பளைச் சந்திக்கு அருகில் வைத்துப் பொது மக்களும், தமிழீழ விடுதலைப் புலிகளும் இந்திய அதிகாரிகளை வரவேற்றனர்.

இந்திய அதிகாரிகளுக்கு வரலாறு காணாத வகையில் பெரிய அளவில் குதூகல வரவேற்பு அளிக்கப்பட்டது.

நிவாரணப் பொருள்களுடன் நேற்று காங்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மோஸஸ் கருத்து

யாழ்ப்பாணம், ஜூன் 26

இலங்கை அரசின் கூற்றை செவிமடுக்கும் நிலையில் நாம் இல்லை.

—இப்படிக் கூறினார் இந்திய கப்பல்களுக்குப் பொறுப்பாக வந்த சிரேஷ்ட அதிகாரி திரு. மோகனதாஸ் மோஸஸ்.

''யாழ் குடாநாட்டில் பட்டினி இல்லை. இந்தியாவில்தான் உண்மையில் பட்டினி நிலை''— இப்படி இலங்கை அரசு கூறிவருவது குறித்துக் கருத்துக் கேட்டபோதே அவர் இப்படிச் சொன்னார். (உ-10)

## லயனல் வந்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 26

இந்திய - உணவுப் பொருள் விநியோகத்தை மேற்பார்வையிடும் கூட்டு இணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. லயனல் பெர்ணண்டோவும்நேற்று விமானம் மூலம் பலாலி வந்து அங்கிருந்து காங்கேசன் வந்து சேர்ந்தார்.

அவருடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் வந்தனர். (உ-10)

## இந்திய மருந்து வகைகளை பகிஷ்கரிக்க யோசனை

கொழும்பு, ஜூன் 26

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகளைப்பகிஷ்கரிக்கும்படி டாக்டர்களைக் கோரும் பிரேரணை ஒன்று சுதந்திர வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் விவாதத்துக்கு வரவுள்ளது.

இக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

ஸ்ரீலங்கா வைத்தியக் கவுன்ஸிலும் அரச மருந்துக் கூட்டுத்தாபனமும் இணைந்து இந்தியாவில் இருந்து மருந்துகளை இறக்குமதி செய்கின்றன.

இங்கு பயன்படுத்தப்படும் மருந்து வகைகளில் ஐம்பது சதவீதமானவை இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. (இ-எ)

## டிக்ஸிற் நேற்று புதுடில்லி விரைவு

கொழும்பு, ஜூன் 26

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்று மாலை அவசரமாக புதுடில்லி சென்றார்.

அதற்கு முன்னர் வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீதை திரு. டிக்ஸிற் சந்தித்துப் பேசினார்.

மேலும் நிவாரண உதவிகளை இந்தியா யாழ் குடாநாட்டுக்கு அனுப்புவது குறித்து அப்போது திரு. டிக்ஸிற் அமைச்சர் ஹமீதுவுடன் பேசினார்.

பின்னர் இந்திய அரசுடன் அவசர ஆலோசனை நடத்துவதற்காக திரு. டிக்ஸிற் புதுடில்லி புறப்பட்டுச் சென்றார். (இ-எ)

## சர்வதேச செஞ்சிலுவை சங்கம் அறிக்கை

ஜெனீவா, ஜூன் 26

யாழ். குடாநாட்டில் பெரும் உணவுப் பஞ்சம் நிலவுகிறது.

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தை மேற்கோள் காட்டி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நேற்று ஜெனிவாவில் விடுத்த அறிக்கை ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ராய்ட்டர் நிறுவனம் இந்த அறிக்கையை நேற்று விடுத்தது. (-உ)

விமானம் மூலம் பொதிகள் போட்ட விவகாரம்:

## பொறுப்பை ஸ்ரீலங்கா அரசே ஏற்க வேண்டும்

### சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 26

இந்தியா விமானம் மூலம் உணவுப் பொதிகளை யாழ்ப்பாணத்தில் போடக் கூடிய நிலையை உருவாக்கிய தற்கான பொறுப்பை ஸ்ரீலங்கா அரசு ஏற்கவேண்டும்.

இப்படிச் சொன்னார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா. நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இக்கருத்தை அவர் வெளியிட்டார்.

திருமதி. பண்டாரநாயக்கா மேலும்சொன்னதாவது;

இந்திய ஒத்துழைப்பு இன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு விடமுடியாது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விஷயத்தில் இன்றைய அரசு உறுதியாகச் செயல்படவில்லை.

விமான மூலம் உணவுப் பொதிகள் போடப் படக்கூடிய அளவுக்கு பிரச்சினையை வளரவிட்டதற்கான பொறுப்பை ஸ்ரீலங்கா அரசே ஏற்க

(4ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப இந்திய அதிகாரியள் வாற வழியிலை, எங்கடை இராமண்ணமார் நடத்தியிருக்கிற செட்டித்தனங்களைக் கொஞ்சமாவது பாத்திருப்பினம்.

## மாபெரும் ஊர்வலம்

ஈழப் போராட்டத்தை அங்கீகரிக்கக்கோரி இன்று யாழ்ப்பாணத்தில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்படும்.

இந்த ஊர்வலம் இன்று காலை 9 மணிக்கு யாழ் நாச்சிமார் கோயிலடியில் இருந்து புறப்படும்.

ஈழவர் முன்னணி இதனை ஏற்பாடு செய்துள்ளது (இ)

# "ஸ்ரீவத்ஸவ" கொண்டு வந்த மருந்துகள் இறக்கப்பட்டன

## அவை 3 லொறிகளில் யாழ். வந்தன

யாழ்ப்பாணம், ஜூன்26

நிவாரணப் பொருள்களுடன் வந்த கப்பல்களில் ஒன்றான ''ஸ்ரீவத்ஸவ''விலிருந்து நேற்று மருந்துவகைகள் இறக்கப்பட்டு மூன்று லொறிகளில் யாழ்ப்பாணம் குருநகரில் உள்ள மருந்துக் களஞ்சியத்துக்கு எடுத்து வரப்பட்டன.

நேற்றுக் காலை பத்தேகால் மணி அளவில் இந்திய உணவுக் கப்பல் 'ஐலண்ட் பிறைட்' பயணிகள் கப்பல் ''ஸ்ரீவத்ஸவ'' ஆகியன ஸ்ரீலங்காவின் கடல் எல்லைக்குள் பிரவேசித்தன.

ஸ்ரீலங்கா கடற்படையின் பீரங்கிப் படகு ஒன்றும் ரோந்துக் கப்பல் ஒன்றும் இவைகளுக்குப் பாதுகாப்பு வழங்க காங்கேசன் துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டன.

பிற்பகல் ஒரு மணியளவில் உணவுக் கப்பல் துறைமுகத்துக்குள்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

26-06-1987
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
05.55 முதல் 07.25 வரை
ராகுகாலம்:-
10.25 முதல் 11.55 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## குடாநாடு எங்கும் மாணவர் ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

ஈழப் போராட்டத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டுமென்று கோரி நேற்று குடாநாடு முழுவதும் மாணவர்கள் ஊர்வலங்களை நடத்தினர்.

இந்த ஊர்வலங்களில் ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இதனால் அனேகமான பாடசாலைகள் நேற்று இயங்கவில்லை.

சில பாடசாலைகளின் முன்னால் உண்ணாவிரதங்களும் இடம்பெற்றன.

நேற்று நண்பகல் ஒரு மணி அளவில் யாழ்ப்பாணம் தட்டாதெருவில் நின்ற மாபெரும் ஊர்வலம் ஒன்றை ஹெலி ஒன்று தாழப் பறந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

இந்தியக் கப்பலில் வந்த

## பத்திரிகையாளருக்கு இறங்க அனுமதி இல்லை

இந்திய அதிகாரிகளுடன் வந்த இந்தியப் பத்திரிகையாளர்களும், தொலைக்காட்சி ஊழியர்களும் காங்கேசன் துறை முகத்தில் தரித்து நிற்கும் அவர்களது கப்பலில் இருந்து இறங்க அனுமதிக்கப் படவில்லை.

கொழும்பில் இருந்து வந்த விசேட உத்தரவு ஒன்றை அடுத்தே இந்த அனுமதி மறுப்பு.

எனினும் தூரதர்ஷன் படப்பிடிப்பாளர் கப்பலை விட்டு இறங்கி காங்கேசன் சந்தி வரை வந்து சென்றதுடன்— அதுவரை நடைபெற்ற சகல நிகழ்ச்சிகளையும் படம் பிடித்துக் கொண்டார்.

யாழ் நகரப் பத்திரிகையாளர்களும் காலையில் காங்கேசன் துறைமுகத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

எனினும்மாலை 4 மணியளவில் அவர்கள் துறைமுகத்தினுள் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன், கப்பலிலும் ஏற அனுமதிக்சப் பட்டனர். (உ-10)

## தமிழரிடமிருந்து முஸ்லிம்களை பிரிக்கச் சதி

### இடைத்தேர்தல்கள் பற்றி புலிகள் - ஈரோஸ் அறிக்கை

சென்னை, ஜூன் 26

தமிழரிடமிருந்து முஸ்லிம்களைப் பிரிக்கும் சதித்திட்டமே தமிழ்ப் பகுதிகளில் இடைத் தேர்தல்களை நடத்தப்போவதான ஸ்ரீலங்கா அரசின் அறிவிப்பு.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், ஈரோஸ் ஆகியன கூட்டாக விடுத்த அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களை தமிழர்களிடம் இருந்து பிரிக்கும் தந்திரமே இடைத் தேர்தல்களை நடத்தப் போவதான அறிவிப்பு,

அரசின் அறிவிப்பை ஏற்று தேர்தல்களில் யாராவது போட்டியிடுவார்களானால் அவர்கள் தமிழ், முஸ்லிம் இனத்தவர்களைக் காட்டிக் கொடுத்தவர்களாகக் கருதப்படுவர்.

- இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

## மோசடி என்கிறார் சம்பந்தன்

சென்னை, ஜூன் 25

தமிழ்ப்பகுதி இடைத் தேர்தல் என்பது ஒரு மோசடி.

இப்படி திருகோணமலையின் முன்னாள் எம். பி. திரு. இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்ப் பகுதிகளிலிருந்து தமிழர்கள் அடித்துத் துரத்தப்பட்டுள்ளனர். இடம்பெயர்ந்து அகதிகளாக அலைந்து திரிகின்றார்கள்.

வாக்காளர்இடாப்புக்கள் மோசடி செய்யப் பட்டுள்ளன.

இப்படி திரு.இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், ''அரசியல்தீர்வு காணாமல் தமிழ்ப் பகுதிகளில் தேர்தல் நடத்த முடியாது''—என்று சொன்னார்.

இடைத் தேர்தல்நடத்தும் ஸ்ரீலங்கா அரசின் அறிவிப்புப் பற்றி ஆராய கூட்டணியின் பொலிற் பீரோ விரைவில் கூட்டப்படும் என்றும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார். (இ-எ)

## மேலும் 70 யாழ்அகதிகள்

சென்னை, ஜூன் 25

70 யாழ் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டில் அம்மாப்பட்டினத்தை கடந்த புதன்கிழமை காலை படகு மூலம் வந்தடைந்தனர். (இ-எ)

தேர்தலில் போட்டியிட்டால்

## இடது கூட்டணியிலிருந்து ல.ச.ச.க. விலக்கப்படும்

கொழும்பு, ஜூன் 26

உள்ளூராட்சித் தேர்தல்களில் லங்கா சமசமாஜக் கட்சி போட்டியிடுமானால் அது இடதுசாரிக் கூட்டணியில் இருந்து விலக்கப்படும்.

கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. கே. பி. ஸில்வா இப்படித் தெரிவித்தார்.

★ உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிட வேண்டாம்.

★ பொதுத் தேர்தல் கோரிக்கையை ஏனைய சக்திகளுடன் சேர்ந்து

(4-ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

**சேவை**

சேலைகள் அச்சிடுதல், தையல் வேலைகள் புதிய பழைய கிளை ஸ்தாபனங்கள் விளம்பரப் படுத்தும் அறிவித்தல்களை எழுதவும் பழைய சேலைகளுக்குப் புதுப்பொலிவுடன் தேவையான டிசைன்களில் அச்சிடுவதற்கும் நவீன தையல் வேலைகளைச் செய்யவும், கோவில் திரைச் சீலை விளம்பரச் சீலைகளைத் தேவையான விதத்தில் எழுதவும், பாதுகாப்பான சூழலில் அமைந்த இடம்.

வசந்தா ரெக்ஸ்ரைல்ஸ் 42, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 1434)

**காணவில்லை**

ராணி எனும் பெயருடைய 11 வயது பெண் பிள்ளை உயரம் 3 அடி வெள்ளைநிறம் தலைமயிர் கட்டையாக வெட்டப்பட்டுள்ளது. 24 ஆம் திகதி மாலையிலிருந்து காணவில்லை. காண்பவர் 48, கொழும்புத் துறைவீதி, சுண்டிக்குளி எனும் விலாசத்துடன் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். (1439)

**கண்டெடுக்கப்பட்டது!**

Hero Ladies Cycle ஒன்று எமது சபையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் வந்து பெற்றுக்கொள்ளவும். போதகர், எக்காளத் தொனி சபை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (1441)

ஆயிரத்து இருநூற்றுக்கும் அதிகமான

# தெங்கு, பனம் பொருள் தொழிலாளர் பாதிப்பு

## தெல்லிப்பளையில் 2 தொழிற்சாலைகள் சேதம்

பலாலி, ஜூன் 26

அண்மையில் காங்கேசனில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் தெங்கு, பனம்பொருள் உற்பத்தி, விற்பனவுக் கூட்டுறவுச்சங்கம் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது, பல இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு தொழிற்சாலைகளை சங்கம் இழந்துள்ளது.

சேந்தாங்குளத்தில் உள்ள போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை ஒன்றும், அட்டமட்டையில் உள்ள கள்ளு அடைக்கும் ஒருதொழிற்சாலையும் ஷெல் தாக்குதல்களினால் தரைமட்டமாகியுள்ளன.

இதனால் ஆயிரத்து200 தொழிலாளர்களும் பணியாளர்களும்நேரடியாகப் பாதிப்படைந்துள்ளார்கள்.

அத்துடன் மாவிட்டபுரப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரின் நடவடிக்கையால் பல தொழிலாளர்களும், பணியாளர்களும் இடம்பெயர்ந்துள்ளனர்.

அடிக்கடி அங்கிருந்து ஏவப்படும் ஷெல்லினால் தெல்லிப்பளையில்இயங்கி வந்த சங்கத்தின் தலைமைப் பணிமனையும் பெரும் சேதமடைந்துள்ளது. தற்போது அளவெட்டியில் உள்ள அலுக்கை என்ற இடத்திற்கு பணிமனை இடம் மாற்றப்பட்டுள்ளது. (உ191)

# ஈரோஸ் பொன்னன் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன். 26

கடந்த திங்களன்று மட்டுநகரை இராணுவம் சுற்றி வளைத்த போது தமது மட்டுநகர் பிரதேச படைத்துறை ஆணையாளர் பாக்கியராசா பொன்னம்பலம் [பொன்னன்] இராணுவச் சூட்டுக்குப் பலியாகி வீரமரணமடைந்ததாக ஈரோஸ் இயக்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.



மட்டுநகர் மகிழவெட்டுவானைச் சேர்ந்த பொன்னன் 1980 ஆம் ஆண்டு ஈழப்புரட்சி அமைப்புடன் தன்னைப் பிணைத்துக் கொண்டார்.

ஆரம்பத்தில் மட்டுநகர் பிராந்திய குழுவில் அங்கம் வகித்த இவர், மட்டுநகரில் ஈழப்புரட்சி அமைப்பின் அத்தனை இராணுவ நடவடிக்கைகளிலும் முக்கிய பங்களிப்பை மேற்கொண்டார்.

1987 மே 30 இல் மட்டுநகர் ஆஸ்பத்திரி வீதி கண்ணிவெடி தாக்குதலின் போதும்—

ஜூன் 11 இல் வவுணதீவு இராணுவமுகாம் மீதும் ஜூன் 14 இல் கரடியனாறு இராணுவமுகாம் மீதும் சிறுபீரங்கித் தாக்குதல்களை நடத்திய போதும்—

ஜூன் 15 இல் பள்ளச் சேனை கண்ணிவெடித்தாக்குதலின் போதும்—

முன்னின்று வெற்றிவீரனாகச் செயற்பட்ட தோழன் பொன்னன் 22 – 06 – 87 இராணுவ சுற்றிவளைப்பின் போது இன்னுயிர் ஈந்தான்.

ஸ்ரீலங்கா அரசை மட்டுநகரில் கதிகலங்க வைத்த தோழன் பொன்னம்பலத்திற்கு ஈழப்புரட்சி அமைப்பு தனது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

— இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. (உ)

# ரயிலை இடையில் நிறுத்திய குண்டுப் பீதி!

## இளம்பெண்களின் கூச்சலால் அந்தப் பெட்டியே அதிர்ந்தது

கொழும்பு, ஜூன் 26

ரயில் பெட்டியில் பொதிகள் வைக்கும் பகுதியில் இருந்து திடீர் என்று கிளம்பிய புகை பிரயாணிகளைக் கிலி கொள்ளவைத்தது. பல பெண்கள் கூச்சலிட்டவாறு ஓடும் ரயிலில் இருந்து வெளியே பாயவும் முற்பட்டனர். இந்த களேபரத்தில் சிலருக்கு உரசல் காயங்கள் ஏற்பட்டன. ரயில் இடையில் நிறுக்தப்பட்ட போது குண்டுப் பீதி அகன்று பிரயாணிகள் பெருமூச்சு விட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் புதன்கிழமை பொல்காவலைக்கும் மாஹோவுக்கும் இடையில் இடம் பெற்றது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கொழும்பு மருதானையில் இருந்து காலை 5.45 க்கு வவுனியா நோக்கி புறப்பட்ட ரயிலில் வழமைபோல் பிரயாணிகள் நிறைந்து காணப்பட்டனர்.

அரைக்கரைவாசி சிங்களவர்களும் தமிழர்களும் பிரயாணம் செய்த என்ஜினுக்கு அடுத்த பெட்டியிலேயே புகை கிளம்பியது.

புகைகிளம்பிஅந்தபெட்டியே அல்லோலகல்லோலப்பட்ட போது பெட்டியில் இருந்த தமிழ் பிரயாணிகளும் என்ன நடக்குமோ என்று பீதி அடைந்து காணப்பட்டனர்.

ரயிலை நிறுத்தும் முயற்சி கைகூடாமல் போகவே அருகில் இருந்த கார்ட் பெட்டிக் கதவை ஒருவர் காலால் உதைத்தார்.

இதன் பின்பே ரயில் நிறுத்தப் பட்டு புகை கிளம்பக் காரணம் மின்சார ஒழுக்கு என்று கண்டு பிடிக்சப் பட்டது.

இந்த சம்பவத்தில் பிரயாணிகள் பலரின் தண்ணீர்ப் போத்தல்கள் உடைந்து ரயிலுக்குள் சிதறிக்கிடந்தன.

அநுராதபுரத்தில் பெரும்பான்மையானோர் இறங்கிய பின்பே தமிழ் பிரயாணிகள் அப்பாடா என்று பெரு மூச்சு விட்டனர். (இ)

அராலியில்

# உற்பத்திக் குழுவின் செயல் திட்டங்கள்

அராலி, ஜூன் 26

கடந்த மூன்று வருடங்களாக மூடிக்கிடந்த அராலி கூட்டுறவு சிகரட் புகையிலை உற்பத்தியாளர் சங்கம் சிறுகைத்தொழில் நிலையமாக மாற்றப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை அராலி உணவு உற்பத்திச்குழு மேற்கொண்டுள்ளது.

இதேவேளை குழு எடுத்துக் கொண்ட முயற்சியினால் பல புதிய செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றன.

பனம் பொருள்களை உற்பத்தி செய்தலும், அவற்றைச் சந்தைப்படுத்தலும் பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் உதவியுடன் பனந்தும்பு உற்பத்தியினை ஆரம்பித்தல், தும்பு கைதொழில்களை ஆரம்பித்தல், சிறுதானியங்களை கொள்வனவு செய்து விற்பனை செய்தல், கிராமத்தில் பால் உற்பத்தியை மேம்படுத்துதல் போன்ற முயற்சிகளே செயற்படுத்தப்பட இருக்கின்றன. (உ-ரி)

# கண்டாவளையில் வரட்சி; கிணறுகளில் நீர்இல்லை

கொடிகாமம், ஜூன் 26

கரைச்சிப் பகுதியைச் சேர்ந்த விவசாய பூமியாகிய கண்டாவளை, வெளிக்கண்டற் பகுதிக் கிணறுகளில் வரட்சியினால் நீர் முற்ருக வற்றி உள்ளது.

குடிப்பதற்குக் கூட நீரின்றி அப்பகுதி மக்கள் கஷ்டப்படுகின்றனர்.

சிலர் கேணிகளைத் தோண்டி நீர் எடுத்து வருகின்றனர்.

சிறுபோக விவசாயமும் வரட்சியினால் பாதிப்புற்றிருக்கிறது.

கண்டாவளையில் சிறிதளவு நீர் உள்ள ஒரே ஒரு பொதுக் கிணற்றிலிருந்து ஐம்பது குடும்பங்கள் நீர் அள்ளி வருகின்றன. (உ–75)

# மாவிட்டபுரத்தில் மக்களை வரவேற்ற ஷெல், வேட்டுகள்

காங்கேசன்துறை, ஜூன் 26

யாழ்ப்பாண வானொலியின் அறிவிப்பை நம்பி நேற்று மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளுக்குச் சென்றவர்கள் 'ஷெல்' தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் தம்மை வரவேற்றதால் பீதியுடன் திரும்பி ஓட்டமெடுத்தனர்.

யாழ்ப்பாண வானொலி நேற்றுக் காலை விடுத்த அறிவிப்பில் மாவிட்டபுரம், வீமன்காமம், தெல்லிப்பளை, கீரிமலைப் பகுதிகளில் மக்கள் மீண்டும் வந்து தமது வீடுகளில் குடியேறலாம் என தெரிவித்ததால் இதை நம்பி அப்பகுதி மக்கள் பலர் நேற்று அங்கு சென்றனர்.

மாவிட்டபுரம் சந்திக்கு அண்மையில் அவர்கள் சென்றபோது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதுடன் தெல்லிப்பளைப் பக்கம் நோக்கி 'ஷெல்' தாக்குதலும் இடம்பெற்றது. (உ-68)

## பதவி உயர்வு

புங்குடுதீவு, ஜூன் 26

அனலைதீவு மகாவித்தியாலய அதிபராக இருந்த திரு. நல்லையா புங்குடுதீவு மகாவித்தியாலயத்துக்கும் அதன் கொத்தணிக்கும் அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் மூன்று வருடங்களாக யாழ் கல்விக் கந்தோரில் பொதுசனத் தொடர்பு அதிகாரியாகவும், அனலைதீவு மகா வித்தியாலயத்தில் ஆறு வருடங்கள் அதிபராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ–131)

# மீனவரை வருத்திய கடற்படையினர்

காரைநகர்ம், ஜூன் 26

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களைக் கடற்படையினர் பிடித்து அடித்து துன்புறுத்தி கடலில் வீசியதுடன், மீனவர்களின் படகிலிருந்த மோட்டார் இயந்திரத்தையும், மீன்பிடி வலையையும் அபகரித்துச் சென்றுள்ளனராம்.

இச்சம்பவம் காரைநகர் கடற் பகுதியில் இடம்பெற்றதாக அறியப்படுகிறது.

17 ஆம் திகதி காலை 4 மீனவர்கள் தொழிலுக்காக கடலுக்குச் சென்றனர்.

அதிகாலை 3-30 மணி அளவில் கடற்படையினர் ரோந்துப் படகில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி அவர்களை அணுகினர்.

மீனவர்களில் இருவர் கடலில் பாய்ந்து தப்பித்துக் கொண்டனர்.

மற்றைய இருவரும் படையினரிடம் அகப்பட்டுக் கொண்டனர். அவர்களைப் படையினர் துன்புறுத்திக் கடலில் வீசினர்.

கரையில் நின்ற மீனவர்களால் அவர்கள் மீட்கப்பட்டனர்.

மீனவர் சென்ற படகிலிருந்த 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகளும், இயந்திரமும் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டன.

# அனைத்து நாடுகளும் பயன்படுத்தக்கூடிய கலைச்சொற்கள் தேவை

கொக்குவில், ஜூன் 26

விபுலானந்தர் காலத்தில் தமிழகத்தில் இருந்த கல்வி நிலையங்களுக்கும் இலங்கையில் இருந்த தமிழ் கல்வி நிலையங்களுக்கும் இடையில் நிறுவன ரீதியில் தொடர்புகள் இருந்தன.

ஆனால் இலங்கையில் தமிழ் பிரதேசத்தில் பல்கலைக் கழகமுள்ள இன்றைய நிலையில் தமிழகத்துக்கும் இவற்றிற்குமிடையே நிறுவன ரீதியில் தொடர்பில்லாமலுள்ளது. தமிழ் மொழியில் புதிய துறைகள் கற்பிக்கப்படும் இக் காலகட்டத்தில் உலகிலுள்ள தமிழ் பேசும் மக்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் ஒரே சொல்லைப் பயன்படுத்தக்கூடியதாக கலைச் சொற்கள் உருவாச்கப்படுதல் அவசியம்.

பாலர் கல்விக் கழகத்தினரின் ''பிஜாயேயின் அறிகை உளவியல்'' நூல் வெளியீட்டு விழாவில் பேசுகையில் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எஸ். சண்முகலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

பாலர் கல்விக் கழகத் தலைவர் திரு. ஆ. செல்லையா தலைமையில் நிகழ்ந்த இந்நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சிகள் வைத்தீஸ்வர வித்தியாலய முன்னாள் அதிபர் திரு. ஸ்ரீநிவாசன் தொழிலதிபர் திரு. எஸ். தியாகராசா ஆகியோரால் குத்து விளக்கேற்றிஆரம்பித்து வைக்கப்பட்டது. (இ.69)

### தேசிக்காய் தட்டுப்பாடு நீங்கியது

கொடிகாமம், ஜூன் 26

சிலமாதங்களாகத் தட்டுப்பாடாக இருந்த தேசிக்காய் இப்போது கொடிகாமச் சந்தையில் மிக அமோகமாக வந்து குவிந்துள்ளது.

# தொலைந்த 'பேர்ஸ்' வீடு வந்து சேர்ந்தது!

சாவகச்சேரி, ஜூன் 26

சவூதிக்குப்போன மருமகன் முன்னர் காணமற் போய்விட்டதாகக்கூறிய அவரது 'மணிபேர்ஸ்' மட்டுவிலில் உள்ள அவரது மாமனருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கொழும்புக்குப் பயணம் செய்தபோது ஓமந்தையில் இந்த 'பேர்ஸ்' காணமற்போய்விட்டது, அதனுள் அடையாளஅட்டை, இரு கடிதங்கள், இலங்கை நோட்டு ஆயிரம் ரூபா, ஒருதொகை சவூதிநோட்டுக்கள் இருந்தன.

தற்போது இலங்கைப் பணம் மட்டுமே இருக்கவில்லை.


நொச்சிமோட்டையில் இதனைக் கண்டெடுத்தவர் தாம் சிப்பாய்க்கு இளநீர் சீவிக் கொடுத்த போது அருகில் உள்ள பற்றைஒன்றினுள் இதனைக் கண்டதாயும்—

கடிதத்திற் கண்ட விலாசத்திற்கே இதனைச் சேர்ப்பிக்கின்றேன் எனவும் தெரிவித்து அதனை அனுப்பி வைத்திருக்கிருர்.

லியோன் என்பவரின் இந்த 'மணிபேர்ஸ்' அவரது மாமனரும் மட்டுவில் ஆரோக்கியவாச வைத்தியசாலை உரிமையாளருமான டாக்டர் பி. பிலிப்ஸ் என்பவருக்கு அனுப்பி வைக்சப் பட்டிருக்கிறது. (உ–31)

31ஆம் நாள் நினைவஞ்சலியும்

**நன்றி நவிலலும்**



லிங்கரட்ணம் (லிங்கம்)

படைப்பு: 13 . 08 . 1953 அழிப்பு: 27 , 05 . 1987

பாசத்தின் உறைவிடமாய் விளங்கி எம்மையெல்லாம் ஆருத்துயரில் விட்டுச் சென்றனையோ! தங்கள் திருவுருவை எங்கே காண்போம் என்று ஏங்குகின்ருேம்.

அன்ஞரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு உதவிபுரிந்தவர்கள், அனுதாபங்கள் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

அன்ஞரின் பிரிவால் துயருறும்

பெற்ருேர், மனைவி, பிள்ளைகள், மைத்துனர்கள், சகோதரி மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

இல. 572/6 கலட்டி அம்மன் வீதி, வண்ணார்பண்ணை. (1440)

## மக்கள் முகம்

### வர்த்தகர் சங்கம்

வேலணை, ஜூன் 26

வேலணை வர்த்தகர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற பொழுது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. சி. கார்த்திகேசு.

உபதலைவர்:- திரு. சோ. மார்க்கண்டு

செயலாளர்:- திரு.ச. சுந்தரமூர்த்தி

உப செயலாளர்:- திரு. மு. யோகராஜா

பொருளாளர்:- திரு. இ. துரைராஜா.

15 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (உ-167)

### சுவர்க்கடிகாரம் அன்பளிப்பு

வட்டுக்கோட்டை, ஜூன் 26

சங்கானை கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்க ராஜாஜி சனசமூக நிலையத்திற்கு சுவர்க் கடிகாரம் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

சங்கானையைச் சேர்ந்த திரு. சின்னத்துரை சிவலிங்கம் என்பவரே இதனை அன்பளிப்புச் செய்தார். (உ-161)

### காரைநகரில் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

சர்வதேச மன்னிப்புச் சபையும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் நேரில் யாழ்ப்பாணம் வந்து நிலைமைகளைப் பார்வையிட அனுமதிக்கும்படி கோரி காரைநகரில் திங்கட்கிழமை ஊர்வலமும், உண்ணாவிரதமும் நடைபெற்றன.

ஊர்வலம் மடத்துக்கரை அம்மன் கோயிலிலிருந்து ஆரம்பித்து மடற்காடு அம்மன் கோயிலடியில் முடிவுற்றது.

அங்கு நடைபெற்ற உண்ணாவிரதத்தில் [illegible] மக்கள் கலந்து கொண்டனர். [illegible]

பெற்ருேலியப் பொருள்களை வாங்கலாம்; ஆனல்

# கொலன்னவை குதத்திற்கு பீப்பாய் கொண்டு போகத் தடை!

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ் குடாநாட்டிலுள்ள தொழிற்சாலைகள் தமக்கு தேவையான பெற்ருேலியம் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப் பொருள்களை கொலன்னாவைக் குதத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

— ஆனல் பீப்பாய்கள் எதையும் இங்கிருந்து எடுத்துச் செல்லக் கூடாது. அங்கேயே விலைக்கு வாங்க வேண்டும்.

— இவ்வாறு வடமாகாண பெற்ருேலியம் கூட்டுத்தாபன முகாமையாளர் எஸ். சிவஞானம் தெரிவித்தார்.

[illegible] ளாக யாழ் குடாநாட்டிலிருந்து எரிபொருள் தடையை அரசு அண்மையில் நீக்கியது.

கண்ணடித் தொழிற்சாலை போன்ற — பேனஸ் ஓயில் பாவிக்கும் — தொழிற்சாலைகள் பல இந்தத் தடையால் மூடப்பட்டுள்ளன.

இத் தொழிற்சாலைகள் இப்போது தமக்குத் தேவையான எரிபொருளை கொலன்னவையில் பெற்றுக்கொள்ளலாம்.

எரிபொருள் கொண்டு வருவதற்கான வெற்றுப் பீப்பாய்களை இங்கிருந்து எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

வெற்றுப் பீப்பாய் ஒன்று 175 ரூபா வீதம் கொலன்னவையில் பெற்றுக்கொள்ளலாம்.—இவ்வாறு அவர் தெரிவித்தார். (உ–ள)

### அகதிகளுக்கு உதவி

சாவகச்சேரி, ஜூன் 26

அறவழிப் போராட்டக்குழுவினர் அச்சுவேலி பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து மட்டுவில் வடக்கு காளி கோவிலில் வந்துதங்கி இருப்போருக்கும் கல் வயல், மீசாலை, கெருடாவில், மந்துவில் பகுதிகளில் உள்ள முகாம்களில் தங்கியிருப்போருக்கும் உணவு மற்றும் நிவாரண உதவிகளையும், மருத்துவ உதவிகளையும் வழங்கியிருக்கின்றனர். (உ–31)

### அடையாள உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளையும் அங்கீகரிக்கக் கோரி புதனன்று பல இடங்களில் அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது.

ஆனைக்கோட்டை சவாற்கட்டு மகாத்மா சனசமூக நிலையம், சரசாலை, கலட்டி பெரியதம்பிரான் கோயில், புங்கங்குளம் நாச்சிமார் கோவிலடி, அரியாலை, கோண்டாவில் மேற்கு உப்புமடம் பிள்ளையார் கோயில், உசன், கச்சாய் மீசாலை, புத்தூர்ச்சந்தி, ஏழாலை, மயிலணி ஆகிய இடங்களில் இந்த உண்ணாவிரத நிகழ்ச்சி நடைபெற்றது. (உ)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

நாட்டுக்காக உயிர் விடுவது உயர்வு அதைவிட உயர்வு நாட்டுக்காக உயிர் வாழ்வது.

—ஹங்கேரி நாட்டுப் பழமொழி.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
26.6.1987 த.பெ.இல: - 23

## பேச்சுவார்த்தை அக்கறை

"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனை, முயற்சி எடுத்து அழைத்து வாருங்கள். அவருடன் பேச்சு நடத்த நான் தயாராக இருக்கிறேன்"

இவ்வாறு தம்மைச் சந்தித்த கொழும்பு இந்துப் பிரசைகள் குழுவிடம் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன.

இந்த மாதத்தின் மிகப்பெரிய பகிடியாக (ஜோக்காக) இதற்குப் பரிசு கொடுக்கலாம்!

பிரபாகரன் — ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் தேடப்படும் ஒரு குற்றவாளியாக வர்ணிக்கப்பட்டவர். அவரைப் பற்றித் தகவல் கொடுப்போருக்கு லட்சம் லட்சமாக சன்மானம் வழங்கப்படும் என்றும் அந்த அரசாங்கம் காலம் விட்டுக் காலம் அறிவித்தது உண்டு.

அரசாங்கத்தின் இரகசியப் பொலீஸாராலோ, உளவறியும் பிரிவுகளாலோ பிரபாகரனை தமது வலைக்குள் சிக்க வைக்க முடியவில்லை!

அந்தத் தோல்வியைத் தொடர்ந்து வெளிநாட்டில் வாழும் இலங்கையர் ஒருவர் பிரபாகரனின் தலைக்கு ஐயாயிரம் ஸ்டேர்லிங் பவுண் (இலங்கை நாணயத்தில் சுமார் இரண்டு லட்சம் ரூபா) பரிசளிக்க முன்வந்தார். அந்த வெளிநாட்டு இலங்கையர் ஜனாதிபதியின் சொந்தக்காரரோ என்னவோ தெரியவில்லை.

ஆட்சி வெறி தலைக்கேறிய மன்னன் அமணன், தனது அண்ணன் குமணனை பதவியிலிருந்து வீழ்த்தியதும் போதாது என்று, அவனது தலையைக் கொண்டு வருவோருக்கு ஆயிரம் பொன்பரிசளிப்பதாக அறிவித்திருந்ததாக இலக்கியம் கூறும். இதை ஒத்த 'ஸ்ரீசங்கபோதி' என்ற கதை சிங்கள இலக்கியத்தில் உண்டு.

இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் பிரபாகரனோடு பேச எடுத்த முயற்சியும் தோற்றுவிட்டது. இந்தியாவால் முடியாத ஒரு விஷயத்தை கொழும்பில் உள்ள ஒரு சிலரால் சாதிக்க முடியும் என்று ஜனாதிபதி கருதுகிறாரா?

மாகாணசபைக்கு மேல் ஒரு படியும் போக முடியாது என்று குதர்க்கம் பேசியவரும்—

டிசம்பர் 19 யோசனைக்கு இந்தியத் தலைவர்களிடமே ஒப்புதல் அளித்துவிட்டு பின்னர் பின்னடித்தவரும்—

தமிழர் தாயகக் கோட்பாட்டை ஏற்க முடியாது என்று முரண்டு பிடித்தவரும்—

தனது அரசியல் வாழ்க்கை முழுவதுமே தமிழர் நலன்களுக்குக் குந்தகமாக இருந்தவரும்—

கடந்த நான்கு வருடங்களில் ஆயிரம் ஆயிரமாய் தமிழர்களைக் கொன்றுகுவிக்கவும், தமிழ்ப் பிரதேசங்களை அழிக்கவும், தமிழர் உடைமைகளை நாசமாக்கவும், அவர்கள் கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை வேர் அறுக்கவும் மூலகாரணமாக இயங்கியவரும்—இதே சாட்சாத் ஜெயவர்த்தனதான்!

மாகாண சபைக்குமேல் எதையும் தமிழர்களுக்கு வழங்குவதற்குச் சிங்கள மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்று கூறியவர், இப்போது பேச்சுநடத்தி எதனைத்தான் அள்ளிக் கொடுக்கப்போகிறார்?

முன்னர் இயங்கி, இப்போது ஒழிக்கப்பட்டுள்ள கிராமசபைகளை மீண்டும் கொடுக்கவா பேச்சுவார்த்தை?

தமிழர் நலன்களுக்கு மாறாகச் செயற்படப்போவதில்லை என்று இந்தியா தெரிவித்துவிட்டது. அதுமட்டுமல்ல தன்னால் ஸ்ரீலங்கா அரசின் உத்தரவைப் பெறாமலே அதன் எல்லைக்குள் வரமுடியும் என்பதையும் அது நிரூபித்துவிட்டது. ஆகையால் இந்திய மத்தியஸ்தத்தை உதறித் தள்ளவேண்டும், அதனை நியாயப்படுத்துவதற்குப் பிரபாகரனுடன் நேரில் பேசிக்கொள்வதாகக் காட்டிக் கொள்ளவேண்டும். இவ்வாறு ஒரு நரித்தந்திரம் அரசின் மூளையில் உதித்திருக்க வேண்டும்.

இந்தியாவின் நிவாரணப் பொருள்கள் யாழ்ப்பாண மக்களுக்குக் கிடைக்கின்றன. அதன்மூலம் அவர்கள் இந்திய அரசுக்கு விசுவாசம் உள்ளவர்களாக மாறிவிடுவார்கள்.

அவ்வாறு மாறுது தடுப்பதன் மூலம் தமிழர்களுக்கு அரசியல் ரீதியில் இந்தியா வழங்கக் கூடிய உதவிகளைத் தடுக்கலாம். ஸ்ரீலங்கா விடயத்தில் கைவையாதே என்று இந்தியாவைப் பார்த்துக் கூற, தடுக்க அதுவே ஒரு மார்க்கம். ஆகையால் எப்படியும் பிரபாவுடன் பேச வேண்டும் என்று ஆலாய்ப் பறக்கிறார் அதி உத்தமர்! அவ்வளவு தான்!!

ஸ்ரீலங்கா அரசுகள் தமிழர் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள், எழுதிய ஒப்பந்தங்கள் எவ்வாறு மடிந்து போயின என்பது தமிழர்களுக்குப் பசுமை நினைவுகள்.

தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள படை முகாம்கள் சகலவற்றையும் மூடிய பின்னர்—

தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்து சுயாட்சிஉரிமை தருவதாக அறிவித்தால்—

இந்திய மத்தியஸ்தத்துடனேயே அது குறித்துப் பேசத் தயாராக இருப்பதாக அறிவித்தால்—

தமிழ் மக்கள் சிலவேளை தமது தலைவர்களைப் பேச்சு வார்த்தைக்கு அனுமதிக்கக் கூடும். வேறு எந்தச் சூழ்நிலையிலும் அல்ல!

# டார்ஜிலிங் கலவரம் அடக்க தீவிரவாத தடுப்புச் சட்டம்

## மேற்கு வங்க அரசு பிறப்பித்தது

கல்கத்தா, ஜூன் 25

டார்ஜீலிங் கலவரத்தை அடக்க தீவிரவாதத் தடுப்புச் சட்டவிதிகள் அமுலாக்கப்பட்டு உள்ளன.

இதற்கான உத்தரவை மேற்கு வங்காள மாநில அரசு பிறப்பித்தது.

கூர்க்காக்களுக்கு தனி நாடு கோரி கூர்காலந்து தேசிய விடுதலை முன்னணியின் 13 நாள் வேலை நிறுத்தம் 5 ஆவது நாளாக நடந்த போது இவ்விதிகள் அமுலுக்கு கொண்டுவரப்பட்டன.

வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து டார்ஜீலிங்கில் வன்செயல்கள் அதிகரித்து வருகின்றன.

இதனிடையில் உள்துறை அமைச்சர் பூட்டாசிங் கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணித் தலைவர் சுபாஷ் கிஷிங்குடன் பேச்சுக்கள் நடத்தினார்.

''முதலில் வன்செயல்கள் கைவிடப்படவேண்டும்; அதன் பின்னரே பேச்சுக்கள் நடத்தப்படும் —இப்படி உள்துறை அமைச்சர் பூட்டாசிங், திரு கிஷிங்கிடம் தெரிவித்தார்.

மேற்கு வங்காள அரசின் அடக்குமுறைகளை எதிர்த்தே டார்ஜீலிங்கில் போராட்டம் நடத்தப்படுகிறது என்று திரு. கிஷிங் பதிலளித்தார்.

மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதிபாசு உள்துறை அமைச்சர் பூட்டாசிங்குடன் பேச்சுக்கள் நடத்த புதுடில்லிக்கு வியாழன் சென்றார். (இ-எ)

### ஆர்ஜன்டீனாவில் மீண்டும் குண்டுவெடிப்புகள்

புவனர்ஸ்அயர்ஸ், ஜூன் 25

ஆர்ஜன்டீனாவின் தலைநகரில் பல குண்டுவெடிப்புச் சம்பவங்கள் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன.

மனிதஉரிமைமீறல்குற்றச்சாட்டுகளுக்கு இலக்கான இராணுவ அதிகாரிகள் மீண்டும் சேவைக்கு அமர்த்தப்பட்டதை எதிர்த்து இச்சம்பவங்கள் இடம்பெற்றன.

ஜனாதிபதி அல்போன்ஸின் கொண்டுவந்த புதிய சட்டம் ஒன்றைத் தொடர்ந்தே தவறிழைத்த அதிகாரிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டதுடன் மீண்டும் பதவிகளும் இராணுவத்தில் வழங்கப்பட்டன. (இ-எ)

## எந்த வல்லரசின் நேச நாடாகவும் சீனா இருக்காது

இஸ்லாமபாத், ஜூன் 25

எந்த வல்லரசின் நேச நாடாகவும் சீனா இருக்காது.

சீனப்பிரதமர் ஷாஓ ஸியாங் இப்படிஅறிவித்தார்.

பாகிஸ்தான் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் சீனப் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

உலக அமைதிக்காக சீனா தன்னாலான அனைத்தையும் செய்யும்.

அதற்காக வல்லரசுகளின் நேசநாடாக சீனா இருக்கமாட்டாது.

தனது அயல்நாடுகளுடன் சீனா நட்புறவு கொள்ளவே விரும்புகின்றது.

நீதி, நியாயமான முறையிலான தீர்வுகளைக் காணுவதன் மூலம் தான் அயலவருடன் நட்புறவை வளர்க்க சீனா விரும்புகின்றது.

இப்படி பிரதமர் சொன்னார். (இ-எ)

## மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் திருக்குறள் டிப்ளோமா

மதுரை, ஜூன் 25

மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் திருக்குறள் ஆராய்ச்சிக்கு என்று டிப்ளோமா பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் எஸ். கிருஷ்ணசாமி இதனைத் தெரிவித்தார்.

இந்த டிப்ளோமா பட்டப்படிப்பு வெற்றிகரமாக நடக்க திருக்குறள் சர்வதேசஇன்ஸ்டிடியூட், திருக்குறள் சங்கம் ஆகியன பூரண ஒத்துழைப்புத்தரவேண்டும்.

இப்படி உபவேந்தர் மேலும் தெரிவித்தார்.

நகரத்தார் சங்கம் அளித்த வரவேற்புவைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக உபவேந்தர் திரு. சேதுநாராயணன் பேசுகையில் திருக்குறள் பற்றிய கருத்தரங்கு ஒன்று பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும்'' என்று அவர் தெரிவித்தார். (இ-எ)

### வெளி உலகில்

தேர்தல் மூலம் ஜனாதிபதி தெரிவு:

## தென்கொரிய ஜனாதிபதி நிராகரிப்பு

சோல், ஜூன் 25

நேரடித் தேர்தல் மூலம் ஜனாதிபதியைத் தெரிவு செய்ய வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை தென்கொரிய ஜனாதிபதி சண்-டு-வாங் நிராகரித்து விட்டார்.

இதன் காரணமாக தொடர்ந்தும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவது என்று எதிர்க்கட்சி அமைப்புக்கள் தீர்மானித்து உள்ளன.

எதிர்க்கட்சிகள் வெள்ளிக்கிழமை சமாதான யாத்திரை ஒன்றை தலைநகரில் நடத்த ஒழுங்குகளைச் செய்துள்ளன.

இதனிடையில் இரண்டு மாதகாலமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் கிம்-டி-யாங் என்பவர் விடுதலை செய்யப்பட்டார்.

எதிர்க்கட்சியின் இன்னொரு தலைவரானகிம்-டி-யாங்குடன் ஜனாதிபதி நடத்திய பேச்சுக்களால் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

அமெரிக்காவின் சிறப்புத்தூதர், தென்கொரிய அரசுத் தலைவர்களுடன் தொடர்ந்து பேச்சுக்களை நடத்தி வருகின்றார்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் இருநூறுபேர் வரை அடுத்த திங்கட்கிழமை விடுவிக்கப்படவுள்ளனர். (இ-எ)

### வால்ட் ஹைமுக்கு எதிர்ப்பு

ரோம், ஜூன் 25

பாப்பாண்டவரைச் சந்திக்க ரோம் நகருக்கு விஜயம் செய்த ஆஸ்திரிய ஜனாதிபதி குர்ட் வால்ட் ஹைமுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

விமான நிலையத்தில் ஜனாதிபதியை வரவேற்ற போது, அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டனர்.

இரண்டாம் உலகமகா யுத்தத்தில் யூதர்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்ட நாஸி படையில் பணியாற்றினார் என்று திரு. வால்ட் ஹைம் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது தெரிந்ததே.

அப்படிப் பட்டவரை பாப்பாண்டவர் சந்திப்பதுகுறித்தும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

திரு. வால்ட் ஹைம் அமெரிக்கா செல்வதற்கு அந்த அரசு தடைவிதித்துள்ளது தெரிந்ததே. (இ-எ)

### கம்யூனிஸ்ட் கட்சியில் மாற்றங்கள்

புடாபெஸ்ட், ஜூன்25

ஹங்கேரி கம்யூனிஸ்ட் கட்சியில் முக்கியமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

# சமயமின்றியாது பயன்?

உலக மக்கள் பசி, பட்டினி இன்றி அன்பாக ஒழுக்கநெறிகளைக் கடைப்பிடித்து நாட்டின் நற்பிரசையாக வாழவேண்டும். இதன் மூலம் மனித வாழ்க்கைக்கு ஈடேற்றம் காணவேண்டும்.

—இதற்குச் சமயமும் விஞ்ஞானமும் இணைந்து கரம்பிடித்துச் செயற்படுவது அவசியமே. இவை இரண்டும் ஒன்றுசேர்வதால் மட்டுந்தான் உலகத்தில் சமாதானம் நிலவும்: ஒற்றுமை ஓங்கும்: நல்வாழ்வு மலரும்: நாடு முன்னேறும்: ஓர் அழகிய உலகம் உதயமாகும்.

**ஞானக்கதிர்**

அன்று மதச்சார்பான ரீதியில் அறிவுமலர்ந்தது.

இன்று விஞ்ஞான ரீதியாக அறிவு வளர்கிறது.

மனிதனை, அவன் வாழும் உலகத்தை-பிரபஞ்சத்தை அறிவதற்குச் சமயக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன.

சமயம் ஒருவனை நல்வழிப்படுத்தும்: ஒழுக்கமான நேர் பாதைக்கு அழைத்துச்செல்லும். உலகத்தில் வாழ்ந்து உய்வதற்கான வழிமுறைகளைக் காட்டித்தரும்.

விஞ்ஞானம் மனிதனுக்கு உல்லாசவாழ்வை மலரச்செய்யும். சொகுசாக இருப்பதற்கு வழிமுறைகளைக் காட்டித் தரும். உடல் அசைக்காமல் தொழிற்பட உதவும். அத்துடன் ஒருசில செயல்புரிந்து மனிதனைக் கதிகலங்கவும் செய்யும்.

அன்று யோகிகளும், ஞானிகளும் தமது தெய்வீக ஆற்றலால் கண்டறிந்த உண்மைகள் மனிதனின் வாழ்க்கை முறையை அமைப்பதற்கு உதவின.

இன்று நவீன விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிக்கும் பல இயற்கைச் செயற்பாடுகள், இயல்புகள் முதலியவற்றை ஏற்கனவே சமயஞானிகள் கண்டறிந்து கூறியுள்ளனர்.

சமய உபதேசங்களைக் கடைப்பிடிக்கும் ஒருவனிடம் அன்பு, ஜீவகாருண்யம், பொறுமை, நீதி நியாயம், பண்பாடு, நேர்மை, மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை, ஒழுக்கம் போன்ற உயர்ந்தகுண இயல்புகள் காணப்படும்.

விஞ்ஞான வளர்ச்சியால் வீட்டில் வாழ்வு மலர்கிறது.

விஞ்ஞான முன்னேற்றம் கண்டு வியக்கின்றோம்; மூக்கின் மேல் கைவிரலை வைக்கின்றோம்; மெய்சிலிர்க்கின்றோம்.

வெற்றிப் பாதையில் உல்லாசப்பயணஞ் செய்து உள்ளம் உவகை கொண்டாலும் இந்த விஞ்ஞானத்தின், உபதேசங்களால், உபயோ

**ஜெ. சுரேந்திரன்**

கங்களால் ஒரு மனிதனுக்கு நல்ல பண்பாடுகளை போதித்து ஒழுக்கசீலனாக, நீதிக்குக் கட்டுப்பட்டவனாகச் செய்யக்கூடியதகுதி இல்லையே இல்லை!

மனிதனுக்கு ஏற்படும் கலக்கத் துயரைத் துடைக்கத்தான் முடியுமா இந்த விஞ்ஞானத்தால்?

ஆனால், சமயத்துக்கோ, எம்மை வாட்டும் துன்ப அரக்கனை விரட்டி ஓட்டிவிடும் சக்திஉண்டு. சில விநாடி தத்தம் சமய மார்க்கப்படி தியானிப் போமேயானால், அடுத்த விநாடி மனம் [illegible] விடும்; திருப்தி ஏற்[illegible] விடும்; களிப்பு ஏற்படும்;

தொழில் ஊக்கம் உதயமாகும்; திறமை வரும்;

சமயத்தின் உயர்வை—மகிமையை உரைக்க யார் வல்லார்.

சாதாரண வாழ்க்கையை விஞ்ஞானம் சுகஜீவன வாழ்க்கையாக மாற்றித்தந்தாலும் அது நாடு நகரங்களை நாசமாக்குகிறது. குண்டு வெடிக்கிறது. வல்லரசுகளின் ஏவுகணைகள் மக்களை ஆட்டி அசைக்கின்றன. அவர்களது கூச்



சல் வானைப் பிளக்கின்றது.

எங்கும் ஒரே பயங்கரம்!

மாடமாளிகைகள் தரைமட்டமாக்கப்படுகின்றன. 'ஷெல்'கள் வெடிக்கின்றன. துப்பாக்கிகள் ரவைகளை ஊதித்தள்ளுகின்றன. கண்ணிவெடிகள் மனிதனை சுக்குநூறாக்குகின்றன;

எங்கும் அழிவு; ஒரே நச்சுப்புகை; இதை மூச்சாக வாங்கியவர்கள் மாண்டு மடிகிறார்கள்; புல் பூண்டு, மரம் சாம்பலாக்கப்படுகின்றன; உயிரினங்கள் துடிதுடித்து விழுகின்றன; இதன் வெறியால் நாடு பரிதவிக்கிறது; கதிகலங்குகிறது;

எங்கும் ஒரே ஓலம்; அவலக்குரல் காதை வெடிக்கவைக்கிறது.

சமயப்போதனைகளால் [illegible] மாற்றி அமைக்கமுடி[illegible] மிருகவெறியனை மனிதனாக மாற்றியபெருமை—

கோபம், ஆவேசம் முதலிய துர்க்குணங்களை அகற்றி நாட்டைச் சீராக்கி பொறுமை; அன்பு, கருணை போன்ற நல்ல பண்பாடுகளைப் புகுத்திய தனித்துவம்—

இப்படி சமயத்தின் பெருமையை எப்படித் தான் கூறுவது?

உன்னத வாழ்க்கைக்கு இறையுணர்வு தான் வேண்டும். சமயம் நல்ல போதனைகளைத் தருகின்றது. ''நல்லதைச்செய்'' என்கிறது''தீயதைவிடு'' என்கிறது. உத்தம பாதையை காட்டுகிறது. ''ஆவேசம் வேண்டாம்'' ''அன்பு வேண்டும் என்கிறது. ''சாந்தியும் சமாதானமும்... நிலவட்டும்'' என்கிறது.

சமய உபதேசங்களைப் பின்பற்றி சாந்தி வழி சென்று நாட்டை - மக்களை உயர்த்துவதே சிறந்தது.

விஞ்ஞானம் வளர்ச்சி அடையவேண்டும். அது நல்லவாழ்க்கை முறைக்கு ஏற்றதாக அமைய வேண்டும். சமயத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் இடையில் இணைப்பு ஏற்படவேண்டும்.

இவை இரண்டும் தனித்து இயங்கினால் மனிதனுக்கு உரிய பயன் கிடைக்காதுபோகும்.

(நன்றி: இந்து இளைஞன் 1986)

(உ)

## தபாலக ஓய்வூதியம் பெறுவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 26

ஓய்வூதியம் பெறுவோருக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் யாவும் சகல தபாலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

-இவ்வாறு யாழ்.செயலக பொதுசனத்தொடர்பதிகாரி திரு. த. குலசேகரம் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்தவர்கள் தமது வவுச்சர்களை தமது பழைய வசிப்பிட தபாலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் அதிபர்கள் இடம் பெயர்ந்துள்ளவர்களின் வவுச்சர்களை உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ளும்வரை வைத்திருப்பர். - இவ்வாறு அவர் தெரிவித்தார். (உ-ள)

### மகா மண்டபம் கட்டிய பின்னரே கும்பாபிஷேகம்

வட்டுக்கோட்டை, ஜூன் 26

சித்தன்கேணி கலைநகர் கம்பம் புலோவ ஆதி வைரவர் கோயில் கும்பாபிஷேகத்தை மகா மண்டபம் அமைத்த பின்னர் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் கர்ப்பக்கிருகமண்டபம் கட்டி முடிக்கப்பட்டதை அடுத்து நடத்தப்படவிருந்த கும்பாபிஷேகம் பொது மக்களின் விருப்பத்திற்கிணங்க மகா மண்டபம் கட்டிமுடிக்கப்பட்ட பின்னர் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கோவில் அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. வீரசுப்பிரமணியம் தலைமையில் கும்பாபிஷேகம் சம்பந்தமாக நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது. (உ-161)

**சமய சந்திகளில்**

### விசேஷ அபிஷேகம்

கொக்குவில், ஜூன்.26

கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்முறை நடைபெறாது,


அதற்குப்பதிலாக இம் மாதம் 24ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் விசேஷ அபிஷேகம் நடைபெற்றுவருகிறது.

அடுத்தமாதம் 3ஆம் திகதி வரை இது நடைபெறும். (இ-69)

### பொங்கல் உற்சவம்

கொக்குவில், ஜூன்.26

கொக்குவில் கோணாவளை வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். (இ-69)



**பொய்யாமொழி**

**குறள்:**

பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம் பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

**பொருள்:**

அறிவுடையவர், (பகைவர் தீங்குசெய்த) அப்பொழுதே உடனே புறத்தில் சினம் கொள்ள மாட்டார்; (வெல்வதற்கு ஏற்ற) காலம் பார்த்து அகத்தில் சினம் கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L 89, WEEKEND CLASSES
9-00 — 10-00 Chemistry
10-00 — 11-00 Physics
11-00 — 12-00 Zoology
12-00 — 1-00 Botany
11-30 — 1-30 Pure / Applied } Maths
New Master Institute
Navalar Road — Jaffna

# உதயன்

26 — 06 — 1987 வெள்ளிக்கிழமை

A/L 88 WEEKEND CLASSES
9-30 — 11-00 Pure / Applied } Maths
11-00 — 12-00 Chemistry
12-00 — 1-00 Physics
1-00 — 2-30 Botany
2-30 — 4-00 Zoology
NEW MASTER Institute
Navalar Road — Jaffna

## வடமராட்சி பாதிப்புகள்: விவரம் திரட்டப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 26
வடமராட்சியில் அரசினால் கடந்த மாத இறுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது பாதிப்புக்குள்ளானவர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய விரும்பும் தொண்டர் நிறுவனங்களுக்கு இந்த விவரங்கள் தேவைப்படுகின்றன.

ஆகையால் சம்பந்தப்பட்டவர்கள் எங்கிருந்தாலும் தத்தமது முன்னைய கிராமசேவகர்கள் ஊடாக அப்பகுதி உதவி அரசாங்க அதிபர்களிடம் விவரங்களை ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்குப் பிந்தாமல் இந்த விவரங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இறப்பு சம்பந்தப்பட்டவர்கள், காயமுற்று நிரந்தரமாக ஊனமுற்று இருப்பவர்கள், இருப்பிடம் சேதமுற்று இருப்பவர்கள் ஆகியோர் முழுப்பெயர், சமயம், வயது, குடும்பத்தினரின் முழுப்பெயர், வயது உள்ளிட்ட விவரங்களை குறிப்பிடவேண்டும்.

இறப்பு அல்லது காயம் துப்பாக்கிச் சூட்டினால், ஷெல் தாக்குதலால், குண்டு வீச்சினால், எரிகுண்டு வீச்சினால், கத்தி/வாள் வெட்டினால் ஏற்பட்டதா என்பதையும் குறிப்பிட வேண்டும்.

வீட்டுச் சேதம் விமானக் குண்டு, குண்டுத் தகர்ப்பு, புல்டோசர் தகர்ப்பு முதலியவற்றில் எதனால் ஏற்பட்டது என்பதைக் குறிப்பிடவேண்டும்.

இந்த விவரங்களடங்கிய விவரக் கூற்றுகளுடன், சத்தியக் கூற்று இணைத்துக் கொடுப்பது விரும்பத்தக்கதாகுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

சம்பவம் பற்றிய குறுகிய விவரம் இணைக்கப்படவேண்டும் - திகதி, நேரம் உட்படத் தரப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (இ)

### உண்ணாவிரதம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரி தொடர்ச்சியாக கிராமம் தோறும் நடைபெற்றுவரும் அடையாள உண்ணாவிரதப் போராட்ட வரிசையில் இன்று காலை 8 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் பொதுமக்களால் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட இருக்கின்றது.

### கொக்குவிலில் உண்ணாவிரதம்

கொக்குவில், ஜூன் 26
கொக்குவில் நந்தாவில் அம்மன் ஆலய முன்றலில் நேற்று நடைபெற்ற உண்ணாவிரதத்தில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

பின்பு அவர்கள் இந்தியப் பிரதிநிதிகள் வருகைதர இருந்த வீதியை நோக்கி மகஜருடன் ஊர்வலமாகச் சென்றனர். (இ-69)

## தமிழீழத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும்

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 26
தமிழீழத்தையும் தமிழீழப் போராளிகள் அமைப்புக்களையும் இந்தியா அங்கீகரித்து ஆயுத, பொருளாதார உதவிகளை வழங்கவேண்டும்.

நல்லூர் இந்து விடுதியில் நேற்று நடைபெற்ற வடக்கு, கிழக்கு பொதுஸ்தாபனங்களின் பொதுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் வடக்கு, கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், கலாசாரக் குழுக்கள், பாடசாலை அபிவிருத்திச் சபைகள், பிரசைகள் குழுக்கள், இந்து, முஸ்லிம் கிறிஸ்தவ ஆலய பரிபாலனசபைகள், பொதுநிதி தொண்டர் ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்களின் அவலங்களை கண்ணுற்று இந்தியா நிவாரணப் பொருள்களை அனுப்பு வதையிட்டு நன்றி தெரிவிப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த இரு தீர்மானங்களுடன் தமிழ் மக்கள் படும் அவலங்கள் அடங்கிய மகஜர் ஒன்றையும் ஸ்தாபனங்களின் சார்பில் இந்திய அதிகாரிகளிடம் கையளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (இ-ள)

### சிப்பாய்கள் பத்திரிகை விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 26
அரசாங்கத்தின் தமிழ்ப்பத்திரிகையான தினகரனை வடமராட்சியில் சிப்பாய்கள் தாராளமாக விநியோகிக்கின்றனர்.

மந்திகை ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகளுக்கு இலவசமாகவும், மற்றையவர்களுக்கு மலிவு விலையிலும் இப்பத்திரிகை வழங்கப்படுகிறதாம். (இ-ள)

## பொற்கோயிலுக்குள் மீண்டும் பொலீஸார்

சண்டிகார், ஜூன் 26
பஞ்சாப் மாநிலத்தில் பொற்கோயிலினுள் பொலீஸார் நேற்று உட்பிரவேசித்து இருநூற்றுக்கும் அதிகமான சீக்கியத் தீவிரவாதிகளைக் கைது செய்தனர்.

இத் தேடுதலை நடத்த உதவுமுகமாக அமிர்தஸரஸில் 2 மணித்தியாலய ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்பட்டது.

சுமார் 2 ஆயிரம் இராணுவத்தினர் பொற்கோயிலைச் சுற்றி வளைத்துக் காவல் புரிய ஆயுதப் பொலீஸார் உள்ளே பிரவேசித்தனர். ஆயுதங்கள், கைக்குண்டுகள் ஏராளமாகக் கைப்பற்றப்பட்டன.

சீக்கியத் தீவிரவாதிகள் பொற்கோயிலினுள் வெள்ளிக்கிழமை கூட்டம் ஒன்றை நடத்த இருந்தனர்.

அதைத் தடுக்குமுகமாகவே பொலீஸார் தேடுதல் நடத்தினர் என்று அறிவிக்கப்படுகின்றது. (இ-எ)

## இந்திய பங்களிப்பையே கோரினேன் மத்தியஸ்தத்தை அல்ல

### ஹமீது கூறுகிறார்

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியாவின் பங்களிப்பைத்தான் புதுடில்லியில் நான் கோரினேன்; இந்தியாவின் மத்தியஸ்தத்தை அல்ல.

— இப்படி வெளியுறவு அமைச்சர் ஜனாப். ஏ. ஸி. எஸ். ஹமீத் தெரிவித்தார்.

'த சண்டே டைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ஜனாப். ஹமீது இதனைத் தெரிவித்தார்.

பேட்டி வருமாறு;

கேள்வி: மத்தியஸ்தர் என்ற முறையில் இந்தியா செயற்படலாம் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா?

அமைச்சர்: இனப் பிரச்சினை வெளிநாட்டுப் பரிமாணங்களுடன்கூடிய ஸ்ரீலங்காவின் உள்நாட்டுப் பிரச்சினை. இது சம்பந்தமான பேச்சுக்களில் இந்தியாவின் பங்களிப்பு இருக்கவேண்டும்.

கேள்வி: இந்தியா தொடர்ந்து மத்தியஸ்தம் செய்யும் என்று நீங்கள் புதுடில்லியில் தெரிவித்ததாக பத்திரிகைச் செய்தி கூறுகின்றதே.

அமைச்சர்: இந்தியா மத்தியஸ்தராக இருக்க வேண்டும் என்றோ, இந்திய மத்தியஸ்தம் பற்றியோ நான் கூறவில்லை. பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவும் பேச்சில் பங்குபற்ற வேண்டும்.

விமான மூலம் உணவுப் பொதிகளைப் போட்ட பின்னர் நான் இந்திய மத்தியஸ்தம் பற்றி ஒரு தரமும் பேசவில்லை.

## "ஸ்ரீவத்ஸவ" கொண்டு.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டுவரப்பட்டது.

கப்பலில் வந்த சிரேஷ்ட அதிகாரி திரு. மோகனதாஸ் மோஸலையும் இந்திய செஞ்சிலுவைப் பிரதிநிதிகளையும் யாழ். அரச அதிபர் குழுவும், யாழ். செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் வரவேற்றனர்.

பயணிக் கப்பலான 'ஸ்ரீவத்ஸவ'வில் கொண்டுவரப்பட்ட மருந்துப் பொதிகளை இறக்கும் வேலைகள் நேற்று மாலை ஆரம்பிக்கப்பட்டன.

மொத்தம் இருபத்தைந்து தொன் நிறையுள்ள மருந்துப் பொதிகள் இக் கப்பலில் வந்தன. அவற்றில் ஒரு பகுதி நேற்றுமாலை இறக்கப்பட்டு மூன்று லொறிகளில் யாழ்ப்பாணம் கொண்டு வந்து சேர்க்கப்பட்டன.

### செஞ்சிலுவை பிரதிநிதிகள்

''ஸ்ரீ வத்ஸவ'' கப்பலில் 16 மாலுமிகளும் 6 செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் 12 பத்திரிகையாளர்களும் வந்திருந்தனர்.

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகளை கொழும்பில் இருந்து வந்த தொழிலாளர்களே மேற்கொண்டனர்.

இன்று 'ஐலண்ட் பிறைட்' என்ற கப்பலில் இருந்து உணவுப்பொருள்களை இறக்கும் வேலைகள் ஆரம்பமாகும். 675 தொன் உணவுப்பொருள்கள் இக் கப்பலில் உள்ளன.

''பொறுகா'' என்ற மூன்றாவது கப்பல் மேலதிக உணவுப் பொருள்களுடன் நாளை சனிக்கிழமை காங்கேசன் துறை வந்து சேரும்.

இந்தக் கப்பலில் 650 தொன் உணவு வகைகள் உள்ளன.

இதனிடையில் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களை துன்பப்படும் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல 35 லொறிகளை யாழ். அரச அதிபர் ஒழுங்கு செய்திருக்கிறார்.

இறக்கும் வேலைகளை மேற்பார்வையிட கொழும்பு அரசு அதிகாரிகள் நேற்றுக் காலை விமானமூலம் காங்கேசன்துறை வந்து சேர்ந்தனர். (இ-எ-10)

### குடாநாடு---

(1ஆம் பக்க தொடர்ச்சி)
அவதானித்தது.

எனினும் ஊர்வலக் காரர்கள் இடத்தைவிட்டு கலைந்து போகாது தொடர்ந்து தமதுபாதையில் சென்றுகொண்டிருந்தனர். (இ-உ)

### இடது கூட்டணி--

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வலியுறுத்துங்கள்.

★ மூன்று கட்சிக் கூட்டணியை உடைத்து விடாதீர்கள்.

இப்படிக் கோரி கம்யூனிஸ்ட் கட்சியும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியும் லங்கா சமசமாஜக் கட்சிக்கு கடிதம் அனுப்பியுள்ளன. (இ-எ)

LONDON EXAMS
NOV. / DEC. 87
C. I. M. A. — Stage I, II & III.
I. D. P. M. — Parts I & II
A. A. T. & I. A. B. — All Stages
✶ ஆரம்பம்: 27 - 06 - 1987 ✶
The Result Oriented Institute in North
North Ceylon Technical Institute
14, St. Peter's Lane, JAFFNA.
குறிப்பு:- சூழ்நிலைக்கேற்ப பாதுகாப்பான இடத்தில் வகுப்புக்கள் நடத்தப்படும்.
(3212)

### 31-ம் நாள் நினைவு தினம்
### திரு. செல்லையாப்பிள்ளை குமாரசிங்கம்



பிறப்பு: 1938 | 08 — 22

இறப்பு: 1987 | 05 | 27

கள்ளம் சிறிதுமிலலா
வெள்ளை மனத்துடனே
உள்ளம் திறந்தெவர்க்கும்
உள்ள கதை பேசி
இன்னலென வந்தவர்க்கு
உள்ள பொருளீந்து
மின்னலென மறைந்தீர்
ஏனோ விரைந்து சென்றீர்?

-குடும்பத்தினர்

## இந்திய உயர் அதிகாரி......

(1ஆம் பக்க தொடர்ச்சி)
கேசன்துறைமுகத்தை வந்தடைந்த இந்திய அதிகாரிகள் குழுவை வரவேற்பதற்காக பல வீதிகளிலும் ஏராளமான மக்கள் காத்திருந்தனர்.

காங்கேசன்துறையில் இருந்து வரும் வீதிகளில் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குஅப்பாற்பட்ட பகுதிகளில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

பல இடங்களில் பூரண கும்பங்கள் வைக்கப்பட்டிருந்தன. பலர் மாலைகளுடன் காத்து நின்றனர். ஊர்வலங்களும் ஆங்காங்கே வந்துகாத்து நின்றன.

ஈழப் போராட்டத்தை அங்கீகரிக்குமாறு ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோளும் விடுக்கப்பட்டது.

ஈழப் போராட்டத்தை அங்கீகரிக்கக் கோரும் பதாகைகளையும் பலர் தாங்கி நின்றனர்.

இந்திய அதிகாரிகள் குழு மானிப்பாய் வீதி ஊடாக யாழ்ப்பாணம் வர இருப்பதாக நேற்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து நேற்று பகல் ஒரு மணி முதலே வீதிகள் எங்கும் பெரும் எண்ணிக்கையான மக்கள் கூட ஆரம்பித்தனர்.

''இந்திய அரசுக்கு நன்றி, ராஜீவுக்கு நன்றி எம். ஜி. ஆர். சுகம் பெறப் பிரார்த்திக்கிறோம்''

''உணவுக்கு நன்றி. உயிர் பாதுகாப்புக்கு போராட்டத்தையும் போராளிகளையும் அங்கீகரியுங்கள்''

''விடுதலைப் புலிகளுக்கு சாம் – 7 வழங்குங்கள்.''

''இந்திய எதிர்க்கட்சிகளுக்கும் நன்றி'' போன்ற சுலோகங்களை இவர்கள் வைத்திருந்தனர்.

பாடசாலை மாணவர்கள் பலர் சீருடையுடன் காணப்பட்டனர். பலர் மகஜர்களுடனும் குழுமி நின்றனர்.

இந்திய அதிகாரிகள் குழு, முன்னும் பின்னும் பெருந்தொகையான வாகனங்கள் அழைத்துவர காங்கேசனில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பவனியாகப் புறப்பட்டனர்.

தெல்லிப்பளையில் இருந்து வீமன்காமம், தொட்டிலடி, சண்டிலிப்பாய், மானிப்பாய் வழியாக அவர்கள் யாழ்ப்பாணம் வந்தனர்

வழி எங்கும் பொது மக்கள் திரண்டு நின்று ஆரவாரம் செய்து குதூகலமாக வரவேற்றனர்.

மக்கள் நெரிசலாகத் திரண்டு நின்றதனால் பவனி முன்னேறி வருவதற்கு அதிக நேரம் எடுத்தது. அவர்கள் இரவு 9 மணிக்கே யாழ்நகர் வந்து சேர்ந்தனர்.

இந்திய அதிகாரிகளுக்கு அணிவித்த மாலைகள் அவர்கள் பவனி வந்த பஸ்ஸில் நிறைந்து கிடந்தன.

ஈழத்தமிழ் மக்களின் வரவேற்பினால் இந்திய அதிகாரிகள் திக்குமுக்காடிப் போயினர் என்றால் மிகையாகாது.

வழி நெடுகிலும் மக்கள் பிடித்திருந்தசுலோக அட்டைகளை பார்வையிட்ட இந்திய அதிகாரிகள் சில சந்தர்ப்பங்களில் அவற்றை வாங்கி வாசித்தபின்னர் தமது பஸ்ஸினுள் அவற்றை வைத்துக் கொண்டனர்.

ஆங்காங்கே மகஜர்களும் இந்திய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் வந்த இந்திய அதிகாரிகள்நேற்றிரவு யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் தங்கி நின்றனர்.

## பொறுப்பை.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டும்.

விமான மூலம் உணவுப் பொருள் போட்ட இந்திய அரசின் செயலை நானும் எதிர்க்கின்றேன்.

இந்திய அரசுடன் நட்புறவை வளர்க்கக் கூடிய விதத்தில் ஜெயவர்த்தன அரசு நடந்து கொள்ளவில்லை.

இஸ்ரவேலர்களை நாட்டுக்குள் அனுமதித்தது, அமெரிக்க வானொலி நிலையம் அமைக்க இடம் கொடுத்தது, பயிற்சி பெற படையினரை இந் நாடுகளுக்கு அனுப்பியது—ஆகிய செயல்கள் தான் இந்தியாவுக்குக் கவலை கொடுத்துள்ளன.

நாட்டின் புதிய அரசாங்கம் ஒன்று ஏற்பட்டால் இந்தியாவின் அணுகுமுறை நட்புரீதியானதாக அமையும் வாய்ப்பு உண்டு.

இந்தியாவின் நிவாரண உதவிகளை ஆரம்பத்திலேயே ஸ்ரீலங்கா அரசு ஏற்று இருக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்குதீர்வு காணும் விஷயத்தில் தென் கொரியா, பிலிப்பீன்ஸ், பங்களாதேஷ் ஆகியன அடைந்த அனுபவங்களை ஸ்ரீலங்கா அரசு உணர்ந்து செயல்பட வேண்டும்.

தமிழ்ப்பகுதிகளில் இடைத் தேர்தல்களை நடத்தப் போவதாக அரசு அறிவித்துள்ளது.

இன்று தேவைப்படுவது பொதுத் தேர்தலே; இடைத் தேர்தல் அல்ல.

இப்படி திருமதி பண்டாரநாயக்க தெரிவித்தார். (இ-எ)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி
### திருவாட்டி. வீரசிங்கம் பாக்கியலக்குமி



தோற்றம்: 5.4.1926 மறைவு: 27.5.1987

எமது குடும்ப ஒளிவிளக்காய் திகழ்ந்து எம்மை வழிநடத்திய குலவிளக்கே எம்மை மீளாத் துயரில் ஆழ்த்தி விட்டு திடீரென பிரிந்து எங்கு சென்றீர்களோ என்றும் உங்கள் நினைவுகளுடன் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை இடைவிடாது பிரார்த்திக்கின்றோம். அமரத்துவம் அடைந்த அன்னாரின் மரணச்சடங்கில் கலந்தும், அனுதாபச் செய்திகளை அனுப்பியும், துக்கம் விசாரித்தும் எல்லா வழிகளிலும் உதவியும், ஒத்துழைப்பும் நல்கிய அனைவருக்கும் எமது பணிவான நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் வீட்டுக் கிரியைகள் 26-06-87 (இன்று) வெள்ளிக்கிழமை 118/4 பிரவுண் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற இருப்பதால் மதிய போசனத்தில் உற்றார் உறவினர் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

118/4, பிரவுண் வீதி.
யாழ்ப்பாணம்.

கணவன், மக்கள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 26-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Friday June 26, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org